Registered as a News Paper in Sri Lanka; டிக்கங்கள் 04 விலை ரூபா 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 01 மார்கழி (30 - 12 - 1990) ஞாயிற்றுக்கிழமை ஓசை 305

## காலநடை சினைப்படுத்தல் தொடர்பாக புதிய ஆய்வு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசின் மின்சாரத் தடையினால் தடைப் பட்டிருந்த கால்நடைகளைச் செயற்கை முறையில் சினைப்படுத்தும் வேலையை விசேட நோதியங்களைப் பாவித்து, தொடர்ந்து மேற்கொள்வதற்கு விசேட ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

செயற்கை முறையில் சினைப்படுத்துவதற்கு பாவிக்கப்படும் காளைமாட்டின் (4ஆம் பக்கம் பார்க்க)

சிறிலங்கா இனவாத அரசுக்கு ஆதரவாக

# தமிழர் விரோத நடவடிக்கையில் தமிழக அரசு இறங்கியுள்ளது!

## விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கண்டனம்

(யாழ்ப்பாணம்)

"தமிழீழ மக்கள் இன்று வரலாறு காணாத ஓர் இன அழிவை எதிர் கொண்டு நிற்கிறார்கள். சிங்களப் பேரினவாத அரசு தமிழ் மக்களுக்கு எதிராக ஓர் அப்பட்டமான இனப்படுகொலையைப் புரிந்து வருகிறது. சாவையும், அழிவையும் சதா சந்தித்துவரும் எமது மக்களுக்கு பாதுகாப்புக் கவசமாக நின்று எமது விடுதலை இயக்கம் இரத்தம் சிந்திப் போராடி வருகிறது. இந்த நெருக்கடியான சூழ்நிலையில் தமிழீழ மக்களின் சுதந்திர இயக்கமாகிய விடுதலைப் புலிகளுக்கு தார்மீக அரணாக நிற்கவேண்டிய தமிழக அரசு, சிங்கள இனவாத ஆட்சியாளருக்கு துணைபோவதுபோல தமிழர் விரோத நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது. எமது விடுதலை இயக்கத்திற்கு எதிராக அபாண்டமான பழிகளைச் சுமத்திவருவதோடு காயமுற்று, ஊனமுற்று தமிழ்நாட்டில் சிகிச்சை பெற்றுவந்த எமது போராளிகளையும் கைதுசெய்து சிறையில் தள்ளியிருக்கிறது. தமிழாபிமானமும், மனிதாபிமானமும் அற்ற இந்த அநீதியான நடவடிக்கைகள் எமக்கு ஆழ்ந்த கவலையையும், வேதனையையும் தருகிறது. தமிழக அரசின் இந்த விபரீதப் போக்கு உலகத் தமிழினத்தை அதிர்ச்சியிலும் வியப்பிலும் ஆழ்த்தியிருக்கிறது."

(3ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் மேலும் இருவர் கால்களை இழந்தனர்

(வவுனியா)

பூந்தோட்டம் பிரதான பாதை இராணுவத்தினரால் தடைசெய்யப்பட்டதை அடுத்து வயல்வெளியூடாக வவுனியா நகரப்பகுதிக்கான பயணத்தை மேற்கொள்பவர்களில் பலர் மிதிவெடியில் சிக்குண்டு கால்களை இழக்கின்றனர்.

மிதிவெடிகள் புதைக்கப் (4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் எம்.பிகள் காப்புறுதிக்கு கூட்டுத்தாபனம் தயக்கம்

### -மாவை குமுறல்

(கொழும்பு)

அண்மையில் நிதி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் பேசிய தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி மாவை சேனாதிராசா காப்புறுதிக் கூட்டுத்தாபனம், (4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் யுத்த நிறுத்தம் அரசின் தீவிரபரிசீலனையில்!

(கொழும்பு)

விடுதலைப்புலிகளால் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்ட ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தம் தொடர்பாக சிறிலங்கா அரசாங்க அமைச்சர்கள் மட்டத்தில் தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அந்த ஆலோசனையில் உள்நாட்டு, வெளிநாட்டு விடயங்கள் தொடர்பான அரசியல் ஆலோசகர்கள் சிலரும் கலந்துகொண்டதாகவும் தெரியவருகின்றது. பல அமைச்சர்கள் இந்த யுத்தநிறுத்தத்தை பயன்படுத்தி சமாதானம் ஏற்படுத்துவதற்கு அரசு முனையவேண்டும் என்று கருத்து வெளியிட்டதாகவும் (4ஆம் பக்கம் பார்க்க)

## வங்காலைப்பகுதியில் மோதல் இராணுவத்திற்குபலத்தசேதம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள வங்காலை இராணுவ முகாமிலிருந்து. நானாட்டான் பகுதியை நோக்கி நகர முனைந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இம் மோதல் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இரு குண்டுவீச்சு விமானங்களும், ஓர் உலங்குவானூர்தியும் வானில் வலம் வந்து கொண்டிருக்க மூன்று கவச வாகனங்கள், ட்றக் போன்றவற்றில் வெளியேறி நகர எத்தனித்த இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே போர் மூண்டது.

இந்தத் தாக்குதலில் இராணுவத்தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டது உயிரிழந்த, மற்றும் காயமடைந்த இராணுவத்தினரைத் தூக்கிக்கொண்டு இராணுவம் வங்காலை முகாமுக்குத் திரும்பியது.

இந்த மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஒருவர் வீரமரணமடைந்தார்.

1990இல் சிறிலங்கா ஒதுக்கீட்டில்

## 12,600 மில். ரூபா பாதுகாப்புக்கு:

## வாவியில் பெருவெள்ளம் :

"தமிழீழ மக்கள் இன்று வரலாறு காணாத ஓர் இன அழிவை எதிர் கொண்டு நிற்கிறார்கள். சிங்களப் பேரினவாத அரசு தமிழ் மக்களுக்கு எதிராக ஓர் அப்பட்டமான இனப்படுகொலையைப் புரிந்து வருகிறது. சாவையும், அழிவையும் சதா சந்தித்துவரும் எமது மக்களுக்கு பாதுகாப்புக் கவசமாக நின்று எமது விடுதலை இயக்கம் இரத்தம் சிந்திப் போராடி வருகிறது. இந்த நெருக்கடியான சூழ்நிலையில் தமிழீழ மக்களின் சுதந்திர இயக்கமாகிய விடுதலைப் புலிகளுக்கு தார்மீக அரணாக நிற்கவேண்டிய தமிழக அரசு, சிங்கள இனவாத ஆட்சியாளருக்கு துணைபோவதுபோல தமிழர் விரோத நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது. எமது விடுதலை இயக்கத்திற்கு எதிராக அபாண்டமான பழிகளைச் சுமத்திவருவதோடு காயமுற்று, ஊனமுற்று தமிழ்நாட்டில் சிகிச்சை பெற்றுவந்த எமது போராளிகளையும் கைதுசெய்து சிறையில் தள்ளியிருக்கிறது. தமிழாபிமானமும், மனிதாபிமானமும் அற்ற இந்த அநீதியான நடவடிக்கைகள் எமக்கு ஆழ்ந்த கவலையையும், வேதனையையும் தருகிறது. தமிழக அரசின் இந்த விபரீதப் போக்கு உலகத் தமிழினத்தை அதிர்ச்சியிலும் வியப்பிலும் ஆழ்த்தியிருக்கிறது."

(3ஆம் பக்கம் பார்க்க)

## கால்களை இழந்தனர்

(வவுனியா)

பூந்தோட்டம் பிரதான பாதை இராணுவத்தினரால் தடை செய்யப்பட்டதை அடுத்து வயல்வெளியூடாக வவுனியா நகரப்பகுதிக்கான பயணத்தை மேற்கொண்டவர்களில் பலர் மிதிவெடியில் சிக்குண்டு கால்களை இழக்கின்றனர்.

மிதிவெடிகள் புதைக்கப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் எம்.பிகள் காப்புறுதிக்கு கூட்டுத்தாபனம் தயக்கம்

### -மாவை குமுறல்

(கொழும்பு)

அண்மையில் நிதி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் பேசிய தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி மாவை சேனாதிராசா காப்புறுதிக் கூட்டுத்தாபனம்,

(4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் யுத்த நிறுத்தம் அரசின்தீவிரபரிசீலனையில்!

(கொழும்பு)

விடுதலைப்புலிகளால்நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்ட ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தம் தொடர்பாக சிறிலங்கா அரசாங்க அமைச்சர்கள் மட்டத்தில் தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அந்த ஆலோசனையில் உள்நாட்டு, வெளிநாட்டு விடயங்கள் தொடர்பான அரசியல் ஆலோசகர்கள் சிலரும் கலந்துகொண்டதாகவும் தெரியவருகின்றது. பல அமைச்சர்கள் இந்த யுத்தநிறுத்தத்தை பயன்படுத்தி சமாதானம் ஏற்படுத்துவதற்கு அரசு முனையவேண்டும் என்ற கருத்து வெளியிட்டதாகவும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வங்காலைப்பகுதியில் மோதல் இராணுவத்திற்குபலத்தசேதம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள வங்காலை இராணுவ முகாமிலிருந்து, நானாட்டான் பகுதியை நோக்கி நகர முனைந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இம் மோதல் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இரு குண்டுவீச்சு விமானங்களும், ஓர் உலங்குவானூர்தியும் வானில் வலம் வந்துகொண்டிருக்க மூன்று கவச வாகனங்கள், ட்றக் போன்றவற்றில் வெளியேறி நகர எத்தனித்த இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே போர் மூண்டது.

இந்தத் தாக்குதலில் இராணுவத்தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டது. உயிரிழந்த, மற்றும் காயமடைந்த இராணுவத்தினரைத் தூக்கிக்கொண்டு இராணுவம் வங்காலை முகாமுக்குத் திரும்பியது.

இந்த மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஒருவர் வீரமரணமடைந்தார்.

## 1990இல் சிறிலங்கா ஒதுக்கீட்டில்

## 12,600 மில். ரூபா பாதுகாப்புக்கு; 1,600 மில். ரூபா அகதிகளுக்கு

(கொழும்பு)

1983இல் பாதுகாப்புக்காக அரசாங்கத்தினால் ரூ. 1·7 பில்லியன் மட்டுமே செலவு செய்யப்பட்டது.

1984ஆம் ஆண்டு முதல் 1990ஆம் ஆண்டுவரை பயங்கரவாதத்தை முறியடிப்பதற்காக செலவிடப்பட்ட மொத்தச் செலவினங்கள் ரூபா 57.000 மில்லியன்கள் ஆகும்; 1990ஆம் ஆண்டில் மாத்திரம் பாதுகாப்புச் செலவுக்காக

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஜே. வி. பியால் 1000 கோடி ரூபா, புலிகளால் 500கோடி ரூபா நட்டம்

ஜே. வி. பி. பயங்கரவாதிகள் ஆயிரம்கோடி ரூபா பெறுமதியான அரசாங்க சொத்துக்களை நாசம் செய்தனர். அதேவேளையில் விடுதலைப் புலிகளால் ஐந்நூறு கோடி ரூபாவுக்கு மேற்பட்ட சொத்துக்களுக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது இதனால் அரிசி, மிளகாய், வெங்காயம், மீன் ஆகிய உணவுப் பொருள்கள் தொடர்பில் பாரதூரமான நட்டம் ஏற்பட்டிருப்பதாக பிரேமதாச ஐ. தே. கட்சியின் நிர்வாகக் குழுக்கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்,

## "அரசின் றெக்கோர்ட் கிரிமினல் றெக்கோர்ட்"

### – அத்தாவுட

(கொழும்பு)

அவசரகாலச சட்டம் என்ற போர்வையில் சண்டித்தனம், மிலேச்சல் செயல் ஆகியவற்றில் ஈடுபடக்கூடாது அரசுக்கு இப்போது நல்ல சூழலில்லை. வெளிநாடுகளில் கெட்ட பெயர் உள்ளது. அரசின் 'றெக்கோர்ட்' கிரிமினல் றெக்கோர்ட்டாக உள்ளது. எனவே அரசு ஜனநாயகத்தைப் பாதுகாக்க முற்படவேண்டுமென அவசரகாலச் சட்டத்தின்மீது பாராளுமன்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### கெனட்

(வங்காலை)

வங்காலையில் நேற்று முன்தினம் இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் விடுதலைப்புலிகளைச் சேர்ந்த கெனட் (அன்ரனி கெனட், பனங்கட்டிக்கொட்டு - மன்னார்) வீர மரணமடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## எல் -சல்வடோரிலும் யுத்த நிறுத்தம்

(எல்-சல்வடோர்)

எல்-சல்வடோரில் புத்தாண்டைக் கொண்டாடுவதற்கு வசதிசெய்யும் முகமாக நாளை திங்கட்கிழமை முதல் ஆறு வாரங்களுக்கு சண்டையை நிறுத்திக்கொள்ளப் போவதாக அரசுக்கெதிராகப் போராடிக்கொண்டிருக்கும் தேசிய விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

கடந்த நவம்பர் மாதம் 20ஆம் திகதி சண்டையை

(4ஆம் பக்கம் பார்க்க)

## வாவியில் பெருவெள்ளம்; படகுகள் விபத்து அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாவிக்கு அப்பால் வசிப்போரும், அப்பகுதிகளில் தஞ்சமடைந்துள்ள அகதிகளும் பொருள்களை வாங்கவும், மற்றும் முக்கிய தேவைகளுக்கும் நகருக்கு வரவேண்டியுள்ளது தற்போது வாவி பெருக்கெடுத்து ஓடுவதனால் அடிக்கடி தோணிவிபத்துக்கள் ஏற்படுகின்றன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## லொறி ஊழியர்களுக்காக மௌன விரதம் அனுஷ்டிப்பு

(வவுனியா)

வவுனியா சர்வோதய அலுவலகப் பகுதியில் வைத்து அழைத்துச் செல்லப்பட்டு அரச படையினரால் மர்மமான முறையில் கொல்லப்பட்ட லொறித் தொழிலாளர்களின் நினைவாக சக லொறித் தொழிலாளர்களினால் மௌன விரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த 21 ஆம் திகதி வவுனியா நகரப் பகுதியில் இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்ட லொறிகள் பல வவு

(4ஆம் பக்கம் பார்க்க)

## பொய் கூறுதல் தகாது; உதை மூலம் எச்சரிக்கை!

(வேலணை)

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்ற வாலிபர் ஒருவரை வவுனியாவில் வைத்து பரிசோதனை செய்த சிறிலங்கா அரசின் இராணுவத்தினர் நீர், கொழும்பு வரும்போது புலிகளிடம அனுமதி பெற்றா வந்தீர்? (பாஸ் எடுத்து) என்று கேட்டனராம்? அதற்கு அந்த வாலிபர் இல்லை என பதில் கூறினாராம். அதற்கு இராணுவத்தினர் புலிகளிடம் அனுமதி பெற்றே வவுனியா வரவேண்டும். அப்படி அனுமதி பெறாமல் வவுனியாவுக்குக் கூட வர

(4ஆம் பக்கம் பார்க்க)

## விளம்பரம்

### விற்பனைக்கு

(பழுப்பு) ஐவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) "மண்டேலா ரேடர்" இல. 255A பருத்தித்துறை வீதி, நல்லூர். "ஆர்ஜவுனியகம்" 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம். (B-888)

### டில்கா வாச் வேக்ஸ்
### DILKA WATCH WORKS

வாடிக்கையாளர்களுக்கு! எமது ஸ்தாபனம் மீண்டும் 404, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம் முன்பாகவும், மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையிலும் இல.3 சித்தன்கேணி றோட், பண்டத்தரிப்பிலும், ஆடியபாதம் வீதி கல்வியங்காட்டிலும் இயங்குகின்றன. சகல மணிக்கூடுகளும். றேடியோக்களும் 60 வருடத்திற்கு மேல் அனுபவமுள்ள தொழிலாளர்களால் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலக்ரோனிக் பற்றறிகளும் விற்பனைக்குண்டு. (B-1653)

### லைடன் ரெக்ஸ்ரைல்ஸ் சென்ரர்

மேற்படி ஸ்தாபனம் மீண்டும் முன்னைய பினான்ஸ் கம்பனி கட்டடத்தில் (249, மின்சார நிலைய வீதி) தமது விற்பனையை 5-11-90 முதல் ஆரம்பித்துள்ளதுடன் புது வருட பண்டிகையை முன்விட்டு மலிவு விற்பனையும் நடைபெறுகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். (B. 1658)

### The Jaffna Education Centre
யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

(சாந்தி சினிமா முன்பாக மேல் மாடியில்) O,L, A/L. Spoken English, Shorthand Typing இரு மொழிகளிலும் நடைபெறுகின்றன. பெண்களுக்கு விடுதி வசதியுமுண்டு. (B. 1657)

### யாழ்ஸ் றெஸ்ரோறன்ற்

வாடிக்கையாளர்களே! முதலாம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம் (ஆரியகுளம்) எனும் முகவரியில் இயங்கி வந்த எமது றெஸ்ற்ரோறன்ற் தற்போது இல.59, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்குகிறது என்பதை அறியத் தருகின்றோம். (800 யார் தூரத்தில்) (B- 1742)


# நிதிக்கம்பனிகள் மேற்பார்வைக்கு அவசர கால விதிகள்

(கொழும்பு)

நிதிக் கம்பனிகளை மேற்பார்வை செய்ய மத்திய வங்கி அவசரகால விதிகளை விதித்துள்ளது.

இதன்படி மத்திய வங்கியின் விசேட பிரதிநிதி ஒருவர் இந்த நிதிக் கம்பனிகளை மேற்பார்வையிடுவார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பணம் போடுவோர், கடன் கொடுப்போர் ஆகியோரின் நலனையும் தேசிய பொருளாதாரத்தையும் காப்பதற்காக அவசர கால விதிகளை பிறப்பித்துள்ளது என மத்திய வங்கி வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொழிற்சாலை தீ 24 பேர் மரணம்

(டாக்கா)

டாக்காவில் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தொன்றில் 19 பெண்கள் உட்பட 24 பேர் உயிர் இழந்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை டாக்காவில் மின்சாரக் கோளாறு காரணமாக துணித் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட தீயினால் வெளியே வர முற்பட்ட தொழிலாளர்கள் சன நெரிசலில் அகப்பட்டு மூச்சுத் திணறலால் 24 பேர் மரணமடைந்துள்ளனர்.

இந்த விபத்தில் 100 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் எனவும் 20 பேரின் நிலைமை மோசமாக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

## துயர்துடைப்பிற்கு 2 நாள் சம்பளம்

வடமாகாணக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச ஊழியர்கள் தமது இரண்டுநாள் சம்பளப் பணத்தை தென்தமிழீழ அகதிகள் நிவாரண நிதிக்கு வழங்கி உள்ளனர்.

அத்துடன் உடுபுடைவைகளையும் சேகரித்து தென்தமிழீழ அகதிகளுக்கு வழங்க ஒப்படைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (21)

## 8000 ஆசிரியர்கள் ஓய்வு பெறுவர்

(கொழும்பு)

புதிய ஓய்வூதியத்திட்டத்தின் கீழ் 8000 ஆசிரியர்கள் ஓய்வு பெற உள்ளார்கள் என கல்விச் சேவைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆனாலும் மாணவர்களின் கல்வி பாதிப்புறாத வகையில் புதிய ஆசிரிய நியமனங்கள் நடைபெறவுள்ளதாகவும் அந்த ஆணைக்குழு அறிவித்துள்ளது.

எதிர் வரும் வருட ஆரம்பத்தில் இதற்கான அனைத்து முயற்சிகளும் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1991-01-31 ஆம் தேதி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

1 ஒட்டுண்ணியியலில்/உடலமைப்பியலில் நிரந்தர/தற்காலிக சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/விரிவுரையாளர் பதவிகள்.

2 ஒட்டுண்ணியியலில்/ ...

விரிவுரையாளர்: ரூபா 4,500- 10X 200-6,500/- மாதமொன்றுக்கு

(மருத்துவ பீடத்தின் விரிவுரையாளர் ரூபா 4,500/-க்கு மேலதிகமாக இரண்டு படிகளில் வைக்கப்படுவார். அதாவது மேற்குறித்த சம்பள அளவுத்திட்டத்தில் ரூபா 4,900/-இல் வைக்கப்படுவார்)

தற்காலிக விரிவுரையாளர் (மருத்துவம்) ரூபா: 4,900/- (நிலையானது)

உதவி விரிவுரையாளர் ரூபா 3 900/- (நிலையானது) ஓராண்டிற்கு

தற்காலிக உதவி விரிவுரையாளர் ரூபா: 3,900/- (நிலையானது)

விண்ணப்பங்கள் இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப்பதிவாளரின் தாபனங்கள் அலுவல ...

## NEW BECON
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

### கலை, வர்த்தகம்
### A/L 90, 91, 92

- பொருளியல் – லோகசிங்கம், வரதராஜன்
- வர்த்தகம் – பிரபல விரிவுரையாளர்
- கணக்கியல் – யோகராஜா
- அளவையியல் – விக்கி
- தமிழ் – மீரா
- இந்துநாகரிகம் – கிருஷ்ணா

**ஆரம்பம்: 06-01 1991**
ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணி

(B/1775).

## 1ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 27 - 11 - 1970



அரியாலை அழிப்பில் 30 - 12 - 1989

செல்வன்
### விஜயரத்தினம் தேவகுமார்
(அறிவாளி)

ஆதிக்க வெறியர்களும்; அடிவருடிகளும்
ஆட்டம் கண்டு ஓட்டம் எடுக்கும்
நேரம்
காட்டிக் கொடுப்புகளும்; கழுத்தறுப்புகளும்
உன்னை
வேஷமிட்டு வேட்டை ஆடினர்;
கோஷமிட்டுக் கூத்தாடினர்.
ஆனால்
கானகப்பறவைகள் கருத்தொருமித்தன.
உன் கனவை நனவாக்கின.

நண்பர்கள் (உயர்தரம் 89)
பரியோவான் கல்லூரி.

(R/981)

## 2 ஆம் வருட நினைவஞ்சலி

### லைடன் ரெக்ஸ்ரைலிஸ் சென்ரர்

மேற்படி ஸ்தாபனம் மீண்டும் முன்னைய பினான்ஸ் கம்பனி கட்டடத்தில் (249, மின்சார நிலைய வீதி) தமது விற்பனையை 5-11-90 முதல் ஆரம்பித்துள்ளதுடன் புதுவருட பண்டிகையை முன்னிட்டு மலிவு விற்பனையும் நடைபெறுகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். (B. 1658)

---

### The Jaffna Education Centre
### யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

(சாந்தி சினிமா முன்பாக மேல் மாடியில்) O.L. A/L. Spoken English, Shorthand Typing இரு மொழிகளிலும் நடைபெறுகின்றன. பெண்களுக்கு விடுதி வசதியுமுண்டு.

(B. 1657)

---

### யாழ்ஸ் றெஸ்ரோறன்ற்

வாடிக்கையாளர்களே! முதலாம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம் (ஆரியகுளம்) எனும் முகவரியில் இயங்கி வந்த எமது றெஸ்ற்ரோறன்ற் தற்போது இல. 59, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்குகிறது என்பதை அறியத் தருகின்றோம். (200 யார் தூரத்தில்) (B- 1742)

---

### கல்வி

G. C. E (O/L)இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் தொடர் வகுப்புக்கள் மூலம் 20 நாட்களிலிருந்து 1 மாதத்திற்குள் சாதாரண திறமைச் சித்திக்கும் ஒரு மாதத்திலிருந்து ஒன்றரை மாதத்திற்குள் விசேட திறமைச் சித்திக்கும் 24 வருட அநுபவமுடைய ஆசிரியரினால் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திர வீதி, சுண்டுக்குளி. (R-973)

---

### மகம் குறூப்

முகாமையாளர் அனுபவம் உடையவர். காசாளர் / குமாஸ்தா - தட்டச்சு தெரிந்திருத்தால் விரும்பத்தக்கது (பெண்பாலார் மாத்திரம்) ஆபீஸ் பியோன் சயிக்கில் டிலிவரி. விற்பனை பிரதிநிதி - அனுபவம் வாகனம் ஓட்ட தெரியவேண்டும். உடன் மனுப்பண்ணவும் 73/4, கலட்டி அம்மன்கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

(R - 984)

---

பட்ட தொழிலாளர்கள் சனநெரிசலில் அகப்பட்டு மூச்சுத் திணறலால் 24 பேர் மரணமடைந்துள்ளனர்.

இந்த விபத்தில் 100 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் எனவும் 20 பேரின் நிலைமை மோசமாக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

சுளை பாதிப்புற்ற இலங்கையின் புதிய ஆசிரிய நியமனங்கள் நடைபெறவுள்ளதாகவும் அந்த ஆணைக்குழு அறிவித்துள்ளது.

எதிர் வரும் வருட ஆரம்பத்தில் இதற்கான அனைத்து முயற்சிகளும் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1991-01-31 ஆம் தேதி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

1 ஒட்டுண்ணியியலில்/உடலமைப்பியலில் நிரந்தர/ தற்காலிக சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/ விரிவுரையாளர் பதவிகள்.

2 ஒட்டுண்ணியியலில்/ உடலமைப்பியலில் நிரந்தர/ தற்காலிக உதவி விரிவுரையாளர் பதவிகள்.

குறிப்பு:

(அ) ஒட்டுண்ணியியலில் நிரந்தர/தற்காலிக உதவி விரிவுரையாளர் பதவிகளுக்கு விண்ணப்பதாரி மிருக விஞ்ஞானமாணி/ விலங்கியலில விஞ்ஞானமாணிச் சிறப்புப் பட்டத்தைப் பெற்றவராயிருத்தல் வேண்டும்.

(ஆ) உடலமைப்பியலில் நிரந்தர/தற்காலிக உதவி விரிவுரையாளர் பதவிகளுக்கு விண்ணப்பதாரி பல் அறுவைச் சிகிச்சைமாணி/ மிருக விஞ்ஞானமணி/ விலங்கியலில் விஞ்ஞானமாணிச் சிறப்பு பட்டத்தைப் பெற்றவராயிருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம்

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II ரூபா 8000-5X 250- 9, 250/- மாதமொன்றுக்கு

தற்காலிக சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II: ரூபா 8,000/-(நிலையானது)

விரிவுரையாளர்: ரூபா 4,500- 10X 200-6,500/- மாதமொன்றுக்கு

(மருத்துவ பீடத்தின் விரிவுரையாளர் ரூபா 4,500/-க்கு மேலதிகமாக இரண்டு படிகளில் வைக்கப்படுவார். அதாவது மேற்குறித்த சம்பள அளவுத்திட்டத்தில் ரூபா 4,900/-இல் வைக்கப்படுவார்)

தற்காலிக விரிவுரையாளர் (மருத்துவம்) ரூபா: 4,900/- (நிலையானது)

உதவி விரிவுரையாளர் ரூபா 3 900/- (நிலையானது) ஓராண்டிற்கு

தற்காலிக உதவி விரிவுரையாளர் ரூபா:3,900/- (நிலையானது)

விண்ணப்பங்கள் இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப்பதிவாளரின் தாபனங்கள் அலுவலகத்தில் கிடைக்கக்கூடிய படிவங்களில் செய்யப்படுதல் வேண்டும்.

விண்ணப்பத்திற்கான வேண்டுகோளுடன் 23X 10ச.மீ அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப் பெற்ற கடிதவுறை அனுப்பப்படல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரசகூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணபித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் வேட்பாளரின் சிறப்புத் தகைமைகளையும்/ அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு அவர் பொருத்தமான சம்பளப்படியில் வைக்கப்படலாம்.

-பதிவாளர்
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1990.12.28

(B/1786)

---

27 - 11 - 1970



30 - 12 - 1989

செல்வன்

## விஜயரத்தினம் தேவகுமார்
(அறிவாளி)

ஆதிக்க வெறியர்களும்; அடிவருடிகளும்
ஆட்டம் கண்டு ஓட்டம் எடுக்கும்
நேரம்
காட்டிக் கொடுப்புகளும்; கழுத்தறுப்புகளும்
உன்னை
வேஷமிட்டு வேட்டை ஆடினர்;
கோஷமிட்டுக் கூத்தாடினர்.
ஆனால்
கானகப்பறவைகள் கருத்தொருமித்தன.
உன் கனவை நனவாக்கின.

நண்பர்கள் (உயர்தரம் 89)
பரியோவான் கல்லூரி.

(R/981)

---

## 2 ஆம் வருட நினைவஞ்சலி

தாயின் மடியில்
16 - 7 - 1969



தாயக விடிவில்
29 - 12 - 1988

## வீரவேங்கை
## கப்டன் லோலோ
(தம்பிராசா சுரேஸ்குமார்)

பேரர் முனைக்குச் செல்லும் போராளிகள்
திரும்பி வருவார்கள் - நிச்சயமாக
எம் நினைவுகளிலும் கனவுகளிலும்
வாழ்கின்ற வேங்கைகளே
நீங்கள் காலத்தால் அழியாத
காவிய நாயகர்கள்
ஆம். தமிழீழ மண்ணின் காவிய நாயகர்கள்

56, புதிய அத்தியடி வீதி
யாழ்ப்பாணம்.

நண்பர்கள்
குடும்பத்தினர்

(B/1787)

## சிந்தனைக்கு

உண்மையான சமயத்திற்கு உரிய தனிச்சிறப்பான இயல்புகள்; நல்லெண்ணம், அன்பு, வாய்மை, தூய்மை, உத்தம உணர்வு, கருணை.

— கௌதமபுத்தர்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 30-12-90
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண்.05


## அரசியலில் உதிரும் அரச மர இலைகள்

அரசியல்வாதிகள், பௌத்த விகாரைகளிலும், தேவாலய நிர்வாகத்திலும் தலையிடுவதைத் தடுப்பதற்கான வகையில் சட்டமூலம் ஒன்று விரைவில் தயாரிக்கப்பட உள்ளது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அரசாங்கத்தின் இந்த அறிவிப்பானது சிறிலங்காவின் அரசியல் வரலாற்றைப் பொறுத்து மிகவும் முதன்மையான தாகும். ஏனெனில் சிறிலங்காவின் அரசியல் வரலாறானது பௌத்தத்துடன் நேரடித் தொடர்புபட்டுள்ளதுடன், பௌத்தத்தின் வரலாறும், அரசியலின் வரலாறும் பின்னிப் பிணைக்கப்பட்டு இருந்து வந்தது. இந்த நிலையில் பௌத்த விகாரைகளின் நிர்வாகத்தில் அரசியல்வாதிகள் தலையிடக் கூடாது என்ற சட்டமூலம், அரசியலில் பௌத்த நிறுவனங்கள் தலையிடக் கூடாது என்பதை மறைமுகமாகச் சுட்டிக் காட்டுவதாகவும் உள்ளது என்றால் அது மிகையாகாது.

சிறிலங்காவின் கடந்த கால அரசியல் வரலாற்றை பௌத்த நிறுவனங்கள் நிர்ணயித்து வந்தன என்றே சொல்லலாம். இந்த நிறுவனங்களின் செல்வாக்கு ஆட்சியாளர் தெரிவில் இருந்து தேசியக் கொடியின் சின்னங்கள், நிறங்கள் வரை பிரதிபலித்து வந்தன. எடுத்துக்காட்டாக தேசியக் கொடியில் உள்ள வாள் ஏந்திய சிங்கமும் அதனைச் சுற்றி இருக்கும் அரச மரத்தின் நான்கு இலைகளும் உணர்த்துவதாகவுள்ளன. இதேபோன்று 1972 ஆம் ஆண்டு அரசியல் அமைப்புச் சட்டத்தில், 1955 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட பௌத்த விசாரணைக் குழுவின் முடிவு சிறு மாற்றத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்டது; இதன்மூலம் சிறிலங்காவில் பௌத்தம் முதன்மையான சமயம் என்றும் பௌத்தத்தைப் பேணி வளர்ப்பது அரசின் கடமை என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, சிறிலங்காவில் நடைபெற்ற பெரியதொரு அரசியல் கொலையான எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்காவின் கொலையுடனும் பௌத்த நிறுவனம் நேரடியான தொடர்பைப் பெற்றிருந்தது.

மேலும் இன்று சிங்கள அரசாங்கம் தமிழர் பிரதேசங்களில் மேற்கொண்டிருக்கும் ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் வழிநடத்துனர்களாகவும், தமிழர் மீதான அடக்கு முறைக்கு உந்துதல் சக்தியாகவும் இந்த பௌத்த நிறுவனங்கள் செயற்பட்டுவருகின்றன.

இவ்வாறாக அரசியலில் முக்கியம் பெற்றுள்ள

# வளைகுடாவில் அமெரிக்க படைகள் உஷார் நிலையில் உள்ளன -ஜோர்ஜ் புஷ்

வளைகுடாவில் அமெரிக்கத் துருப்புக்கள் உஷார் நிலையில் இருப்பதாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் சபை விதித்த காலக்கெடுவான ஜனவரி 15க்கு முன் ஈராக் குவைத்தைவிட்டு வெளியேறாவிட்டாலும் போர்தொடங்க மேலும் ஒரு மாதகால அவகாசம் தேவைப்படும் என்று வெளிவந்த ஊகச் செய்திகளை அமெரிக்க அதிபர் நிராகரித்துள்ளார்.

வளைகுடாவில் இருக்கும் அமெரிக்கத் தளபதி ஒருவர் கால அவகாசம் தேவை என்று கூறியிருப்பதாகவும், வளைகுடாவுக்குச் சென்று வந்த அமெரிக்க பாதுகாப்புச் செயலாளரும் அமெரிக்க அதிபரிடம் கால அவகாசம் தேவை என்று ஆலோசனை தெரிவித்திருப்பதாகவும் செய்திகள் முன்னர் வெளியாகியிருந்தன.

இவ்வாறு வெளிவந்த செய்திகளால் எரிச்சலடைந்த ஜோர்ஜ் புஷ் தமது படைகளின் ஆயத்த நிலையில் எந்தச் சுணக்கமும் இல்லை என்று அடித்துச் சொல்லியிருக்கின்றார்.

இதனிடையில் அமெரிக்கத் தரப்பினரின் உஷார் நிலை கள் பற்றி ஈராக் துல்லியமாகக் கவனிப்பதைத் தவிர்ப்பதற்காக அமெரிக்கா பரப்பிவரும் வதந்திகளாக இவை இருக்கலாம் என அரசியல் அவதானிகளும், கண்காணிப்பாளர்களும் கருத்து தெரிவித்துள்ளனர்.

## சமாதான முயற்சிகள் தோற்றுப் போய்விடவில்லை

இது இவ்வாறிருக்க லண்டனில் இருந்து வெளியாகும் செய்திகள் சமாதான முயற்சிகள் இன்னமும் தோற்றுப் போய்விடவில்லை எனத் தெரிவிக்கின்றன. பேச்சுவார்த்தை மூலமும், ராஜீய உறவுகள் மூலமும் நேர்சீராக்கும் முயற்சியினை அரபு நாடுகள் சிலவும், ஐரோப்பிய நாடுகள் சிலவும் மேற்கொண்டுள்ளன. பக்தாத்தும், வாஷிங்டனும் இத்தகைய செய்திகளை நிராகரித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. அல்ஜீரியாவின் தலைவர் சாட்லி பெஞ்சமின் அவர்கள் இந்தச் சமாதான முயற்சியில் முழுமூச்சுடன் ஈடுபட்டுள்ளார்.

மத்திய கிழக்கில் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்கள் சகலதையும் பற்றி முடிவு செய்து, ஐக்கிய நாடுகள் சாசனப்படி ஒவ்வொன்றாக விவாதிக்கலாம் என்பது சதாம் ஹுசைனின் நிலை. பாலஸ்தீன சதாம் ஹுசைனின் இந்த விவாதத்தின் நியாயத்தை பிரான்சு ஏற்றுக்கொண்டாலும் காசா பகுதியிலிருந்து இஸ்ரேலின் வெளியேற்றமும், குவைத்திலிருந்து ஈராக் வெளியேற்றமும் சேர்ந்தாற்போல இருக்க வேண்டுமெனஎதிர்பார்க்கலாகாது எனத் தெரிவித்துள்ளது.

## பொதுக் கூட்டம்

பாரதி சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டமும், 1991ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் தெரிவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.4.00 மணிக்கு நிலையப் பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் முக்கிய பிரமுகர்களாக யாழ். மாநகரசபை அதிகாரிகளும், உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## எதிர்க்கட்சியாக காங்கிரஸ்?

(புதுடில்லி)

இந்தியாவின் மாநிலங்களவையான ராஜ்ய சபாவில் நேற்று முன்தினம் தேசிய முன்னணிக் கட்சிகள் வெளிநடப்புச் செய்தன. ராஜ்ய சபாவில் இந்திரா காங்கிரஸ் கட்சி தொடர்ந்தும் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்க, காங்கிரஸ் கட்சியின் ராஜ்யசபா தலைவர் அனுமதி கோரினர் என்றும், ராஜ்ய சபா தலைவர் அட்ர்னி ஜெனரலிடம் ஆலோசனை நாடியிருப்பதாகவும் தெரியவந்ததை அடுத்து தேசிய முன்னணிக் கட்சிகள் வெளிநடப்புச் செய்துள்ளன.

## திருட்டு

யாழ்.நகரின் தற்போது புதிய கடைகள், வர்த்தக நிலையங்கள் செயற்பட்டு வருவதால் இரவு நேரத் திருட்டுக்களும் அதிகரித்துள்ளன. இதனால் நகரப்பாதுகாவல் சேவைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (லோ)

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகம் இன்று வெளியிட்டுள்ள அதிகாரபூர்வமான அறிக்கையில் கண்டனம் தெரிவித்திருக்கிறது. இந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

“அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளை தமிழ்நாட்டு அரசு கைது செய்து காவலில் வைத்துள்ளது. இவர்களில் பெரும்பாலானோர் விடுதலைப் போரில் காயமடைந்தவர்கள், கை, கால்களை இழந்து ஊனமடைந்தவர்கள், ஒருவர் கண்களை இழந்தவர். மூவர் இடுப்புக்குக் கீழ் செயலிழந்தவர்கள். இவர்களில் ஒருவர் பெண் போராளி என்பதை அறிவித்திருந்தோம். இது பற்றி மத்திய அரசுடன் கலந்தாலோசித்த தமிழக அரசு இந்தப் போராளிகளை தமிழ்நாட்டில் சிகிச்சை பெற அனுமதித்தது. இவ்விதம் தமிழக அரசால் வரவழைக்கப்பட்ட காயமுற்ற, ஊனமுற்ற விடுதலைப் போராளிகளை இன்று தமிழக அரசு கைதுசெய்து காவலில் வைத்திருக்கிறது. இந்த அநீதியான நடவடிக்கையானது எமது விடுதலை இயக்கத்திற்கும் தமிழீழ மக்களுக்கும் செய்யப்பட்ட நம்பிக்கைத் துரோகமாகவே நாம் கருதுகிறோம். விடுதலைப் புலிகள் இயக்கத்தால் தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கிற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும், புலிகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராக திட்டமிட்ட பொய்ப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எமது விடுதலை இயக்கத்தை மாசுபடுத்தி, நியாயபூர்வமான எமது மக்களின் விடுதலைப் போராட்டத்தை களங்கப்படுத்தி, தமிழ் நாட்டு மக்களை குழப்பிவிடும் நோக்கத்துடன் பல்வேறு சக்திகள் இந்த அபாண்டமான பொய்ப் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றன. இது எமக்கு ஏமாற்றத்தையும் ஆழ்ந்த வேதனையையும் தருகிறது. தமிழக அரசியலின் சதுரங்க ஆட்டங்களிலும் அதிகாரப் போட்டிகளிலும் எமக்கு அக்கறையில்லை. ஆனால் இனப்படுகொலையை எதிர்கொண்டு நிற்கும் எமது மக்களின் ஜீவமரணப்

நிலையில் பௌத்த விகாரைகளின் நிர்வாகத்தில் அரசியல்வாதிகள் தலையிடக் கூடாது என்ற சட்டமூலம், அரசியலில் பௌத்த நிறுவனங்கள் தலையிடக் கூடாது என்பதை மறைமுகமாகச் சுட்டிக் காட்டுவதாகவும் கொள்ளலாம் என்றால் அது மிகையாகாது.

சிறிலங்காவின் கடந்த கால அரசியல் வரலாற்றை பௌத்த நிறுவனங்கள் நிர்ணயித்து வந்தன என்றே சொல்லலாம். இந்த நிறுவனங்களின் செல்வாக்கு ஆட்சியாளர் தெரிவில் இருந்து தேசியக் கொடியின் சின்னங்கள், நிறங்கள் வரை பிரதிபலித்து வந்தன. எடுத்துக்காட்டாக தேசியக் கொடியில் உள்ள வாள் ஏந்திய சிங்கமும் அதனைச் சுற்றி இருக்கும் அரசமரத்தின் நான்கு இலைகளும் உணர்த்துவதாகவுள்ளன. இதேபோன்று 1972 ஆம் ஆண்டு அரசியல் அமைப்புச் சட்டத்தில், 1955 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட பௌத்த விசாரணைக் குழுவின் முடிவு சிறு மாற்றத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன்மூலம் சிறிலங்காவில் பௌத்தம் முதன்மையான சமயம் என்றும் பௌத்தத்தைப் பேணி வளர்ப்பது அரசின் கடமை என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, சிறிலங்காவில் நடைபெற்ற பெரியதொரு அரசியல் கொலையான எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்காவின் கொலையுடனும் பௌத்த நிறுவனம் நேரடியான தொடர்பைப் பெற்றிருந்தது.

மேலும் இன்று சிங்கள அரசாங்கம் தமிழர் பிரதேசங்களில் மேற்கொண்டிருக்கும் ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் வழிநடத்துனர்களாகவும், தமிழர் மீதான அடக்குமுறைக்கு உந்துதல் சக்தியாகவும் இந்த பௌத்த நிறுவனங்கள் செயற்பட்டுவந்துள்ளன.

இவ்வாறாக அரசியலில் முக்கியம் பெற்றுள்ள பௌத்த நிறுவனங்களை பல அரசியல்வாதிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டமையும், அவற்றின் தமது பாதுகாப்பைத் தேடிக் கொண்டமையும் ஒரு புறமிருக்க மறுபுறமாக பௌத்த நிறுவனங்கள் தாமாகவே அரசியலில் பெரும் தலையீடுகளைச் செய்தும் வந்துள்ளன. இந்த நிலையில் நாட்டின் அரசியல் தலைவர்கள் கூட தாம் விரும்பிய நடவடிக்கைகளை பௌத்த நிறுவனங்களின் சம்மதமின்றி மேற்கொள்ள முடியாதநிலைஏற்பட்டிருந்ததோடு, பௌத்தசங்கங்களுடன் உறவு கொண்டுள்ள அரசியல்வாதிகளின் செல்வாக்கினை அரசியலில் கட்டுப்பண்ண முடியாத நிலையும் ஏற்பட்டது.

இவ்வாறாக பௌத்த நிறுவனங்கள் அரசியல் மயப்பட்டுள்ள வேளையில் அரசாங்கம் பௌத்த நிறுவனங்களில் அரசியல்வாதிகள் தலையீடு செய்யக் கூடாது என்ற சட்டத்தைக் கொண்டு வரவுள்ளமை பௌத்த நிறுவனங்கள் ஊடாக அரசாங்கம் ஒரு பெரும் அச்சுறுத்தலை எதிர் நோக்குகின்றதா? அல்லது பௌத்த நிறுவனங்களில் இன்றும் முதன்மை பெறும் ஆட்சித் தலைவரின் எதிர்ப்பாளர்களை ஒதுக்கித் தள்ளுவதற்காகவா என்று சந்தேகப்பட வைக்கின்றது.

அதேவேளை, தினசரி காலை, மாலை என இரு வேளைகளிலும் நாட்டின் பல பாகங்களிலும் உள்ள விகாரைகளில் பௌத்த நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா அரசாங்கம் இவ்வாறானதொரு சட்டத்தைக் கொண்டுவருதல் என்பது, ஜனாதிபதி பிரேமதாசா தன்னை ஒரு பௌத்த காவலனாகக் காட்டிக் கொள்வதின் மூலம் மக்கள் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் இராஜதந்திரத்திற்கு ஏற்பட்ட தோல்வியா என எண்ணத்தோன்றுகின்றது.

## பொதுக் கூட்டம்

பாரதி சனசமூக நிலையத்தின் பொதுக் கூட்டமும், 1991ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் தெரிவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு நிலையப் பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் முக்கிய பிரமுகர்களாக யாழ். மாநகரசபை அதிகாரிகளும், உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

செய்து, இராணுவ நடவடிக்கை சார்பாயின் ஒன்றெனவாக விளங்குவதாகும் என்பது சதாம் ஹுசைனின் நிலை. பாலஸ்தீனிய தீர்ப்பு சதாம் ஹுசைனின் இந்த விவாதத்தின் நியாயத்தைப் பிரான்ஸ் ஏற்றுக்கொண்டாலும் காஸா பகுதியிலிருந்து இஸ்ரேலின் வெளியேற்றமும், குவைத்திலிருந்து ஈராக் வெளியேற்றமும் சேர்ந்தாற்போல இருக்க வேண்டுமெனஎதிர்பார்க்கலாகாது எனத் தெரிவித்துள்ளது.

ரலிடம் ஆலோசனை நடாத்தப் படாதுகவும் தெரியவந்ததை அடுத்து செய்யமுன் எணிக்கைகள் வெளியிடப்புச் செய்யன.

## திருட்டு

யாழ். நகரின் தற்போது புதிய கடைகள், வர்த்தக நிலையங்கள் செயற்பட்டு வருவதால் இரவு நேரத் திருட்டுக்களும் அதிகரித்துள்ளன. இதனால் நகரப்பாதுகாவல்சேவைகளும் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. (லோ)

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகம் இன்று வெளியிட்டுள்ள அதிகாரபூர்வமான அறிக்கையில் கண்டனம் தெரிவித்திருக்கிறது. இந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

"அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளை தமிழ்நாட்டு அரசு கைதுசெய்து காவலில் வைத்துள்ளது. இவர்களில் பெரும்பாலானோர் விடுதலைப் போரில் காயமடைந்தவர்கள், கை, கால்களை இழந்து ஊனமடைந்தவர்கள். ஒருவர் கண்களை இழந்தவர். மூவர் இடுப்புக்கு கீழ் செயலிழந்தவர்கள். இவர்களில் ஒருவர் பெண் போராளி என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர்களைப் பராமரிக்க நின்ற சிலரை தமிழ்நாடு காவல் துறையினர் தாக்கியுள்ளனர். இந்தக் காயமடைந்த போராளிகள் அனைவரும் வைத்திய மனையில் வைத்து கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

"தமிழ் நாட்டு அரசு ஆரம்பத்தில் கைதுசெய்த 16 விடுதலைப்புலிகள் சரியான முறையில் பராமரிக்கப்படாததால் இவர்களில் இருவர் மிகவும் கடுமையாக சுகவீனமடைந்துள்ளனர். இவர்களை காவல் துறையினரின் பாதுகாப்பில் வைத்துநாம் வைத்தியம்செய்வதாகக் கேட்டபோது தமிழ்நாடு அரசு மறுத்துவிட்டது. பின்னர் கைதுசெய்யப்பட்ட 10 போராளிகள் எரிபொருள் திருடியவர்களென அவர்கள் மீது அபாண்டமான வீண்பழி சுமத்தப்பட்டது. ஆனால் உண்மையில் நடந்தது என்ன?

"சிறிலங்கா - தமிழீழப் போரின் விளைவாக எமது போராளிகள் பலர் படுகாயமடைந்தனர். இவர்களில் சிலர் சிக்கலான காயங்களுக்கு ஆளானதால் அவர்களுக்கு பாதுகாப்பான முறையில் தகுந்த சிகிச்சை தமிழீழத்தில் அளிக்க முடியவில்லை. இந்தப் போராளிகளின் பரிதாபமான நிலைமைபற்றி நாம் தமிழக முதல்வருக்கு அறிவித்திருந்தோம். இது பற்றி மத்திய அரசுடன் கலந்தாலோசித்த தமிழக அரசு இந்தப் போராளிகளை தமிழ்நாட்டில் சிகிச்சை பெற அனுமதித்தது. இவ்விதம் தமிழக அரசால் வரவழைக்கப்பட்ட காயமுற்ற, ஊனமுற்ற விடுதலைப் போராளிகளை இன்று தமிழக அரசு கைதுசெய்து காவலில் வைத்திருக்கிறது. இந்த அநீதியான நடவடிக்கையானது எமது விடுதலை இயக்கத்திற்கும் தமிழீழ மக்களுக்கும் செய்யப்பட்ட நம்பிக்கைத் துரோகமாகவே நாம் கருதுகிறோம். விடுதலைப் புலிகள் இயக்கத்தால் தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கிற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும், புலிகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காகவே இந்தக் கைது நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தமிழக அரசு கூறுகிறது. இந்தக் குற்றச்சாட்டில் எந்தவித அர்த்தமும் நியாயமும் இல்லை. ஏனென்றால் கைது செய்யப்பட்டவர்கள் காயமுற்ற நோயாளிகள், கை கால்களை இழந்த அங்கவீனர்கள், கண் தெரியாதவர்கள். இவர்களால் தமிழ் நாட்டிற்கும், இந்தியாவிற்கும் ஆபத்து ஏற்படப்போவதாகக் கூறுவது அர்த்தமற்றது; சிரிப்புக்கு இடமானது.

"தமிழகம் எமது மூதாதையோர் பூமி. தமிழக மக்கள் இனத்தால், இரத்தத்தால் எம்முடன் பின்னிப் பிணைந்தவர்கள். காலம் காலமாய் தமிழக மக்கள் எமது சுதந்திரப் போராட்டத்திற்கு தார்மீகப் பலமாக இருந்துவருகிறார்கள். ஈழத் தமிழினம் இரத்தம் சிந்தும் போதெல்லாம் தமிழகம் பொங்கி எழுவதுண்டு. தமிழுணர்வு, இனவுணர்வு, மனிதாபிமானவுணர்வு என்ற அடிப்படையில் தமிழகம் எமக்காக குரலெழுப்பி வருகிறது. தமிழக மக்களின் ஆதரவும் அனுதாபமும் எமது உரிமைப் போராட்டத்திற்கு ஒரு உந்து சக்தியாக இருந்து வருகிறது. அத்தோடு, எமது எதிரிக்கும் ஒரு அச்சுறுத்தலாக அமைந்திருக்கிறது. ஆனால் சமீபகாலமாக தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராக திட்டமிட்ட பொய்ப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எமது விடுதலை இயக்கத்தை மாசுபடுத்தி, நியாயபூர்வமான எமது மக்களின் விடுதலைப் போராட்டத்தை களங்கப்படுத்தி, தமிழ் நாட்டு மக்களை குழப்பிவிடும் நோக்கத்துடன் பல்வேறு சக்திகள் இந்த அபாண்டமான பொய்ப் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றன. இது எமக்கு ஏமாற்றத்தையும் ஆழ்ந்த வேதனையையும் தருகிறது. தமிழக அரசியலின் சதுரங்க ஆட்டங்களிலும் அதிகாரப் போட்டிகளிலும் எமக்கு அக்கறையில்லை. ஆனால் இனப்படுகொலையை எதிர்கொண்டு நிற்கும் எமது மக்களின் ஜீவமரணப் போராட்டத்தை தமது சொந்த அரசியல் நலன்களுக்காகப் பயன்படுத்த முயல்வது எந்தவகையிலும் நியாயமானதல்ல. இது மிகவும் கொடுமையானது. இந்த விபரீதமான அரசியல் தமிழீழ மக்களின் இனப் படுகொலைக்கு ஊக்கமளிக்கும் ஆபத்தான அம்சங்களைக் கொண்டிருக்கிறது என்பதையும் நாம் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

"விடுதலைப்புலிகள் அமைப்பானது தமிழீழ மக்களின் தேசிய சுதந்திர இயக்கமாக கடந்த 18 ஆண்டுகளாக ஒரு உன்னத இலட்சியத்திற்காகப் போராடிவருகிறது. தமிழீழ மக்களின் சுதந்திர எழுச்சியின் வடிவமாக அளப்பரிய தியாகங்களைப் புரிந்து எமது இயக்கம் இரத்தம் சிந்திப் போராடிவருகிறது. இன அழிவை எதிர்கொண்டு நிர்க்கதியாய் நிற்கும் எமது மக்களுக்கு புலிகள் இயக்கமே ஒரேயொரு பாதுகாப்பு அரணாக இருந்து வருகிறது. இந்த யதார்த்த உண்மையை உணர்ந்து தமிழக மக்களும், தமிழக அரசியல் இயக்கங்களும் விடுதலைப் புலிகளுக்கும் அவர்கள் முன்னெடுக்கும் இலட்சியப் போராட்டத்திற்கும் பக்கபலமாக நிற்கவேண்டும். அதுவே தமிழீழ மக்களின் விடிவுக்கும் பாதுகாப்பிற்கும் வழிவகுக்கும்."

# இராஜதந்திர, இராணுவ ரீதியாக போராட்டத்தை முன்னெடுக்கிறோம்

(யாழ்ப்பாணம்)

எமது தமிழ் ஈழ விடுதலைப்போராட்டத்தை இராஜதந்திர ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் முன்னெடுத்துச் செல்கின்றோம். நாம் இராணுவ, இராஜதந்திர ரீதியாக மேற்கொண்ட நடவடிக்கைகளினாலேயே பலம் வாய்ந்த இந்திய இராணுவத்தை வெளியேற்ற முடிந்தது. நாம் இந்திய இராணுவம் இந்த மண்ணுக்குத் தேவையில்லை என்று கூறினோமே தவிர, இந்தியாவை வெறுத்ததில்லை. மக்கள் குழப்பமடையாமல் தமது ஒத்துழைப்பை எமக்கு வழங்க வேண்டும்.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நேற்று இடம் பெற்ற துயருறும் தென் தமிழீழ மக்களுக்கான கூட்டுறவாளர்களின் நிதிப் பங்களிப்பு வைபவத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர்

## — ராஜன்

ராஜன் தெரிவித்தார்.

மேற்படி வைபவத்தில் தென் தமிழீழ மக்களின் துயர் துடைப்பிற்கான கூட்டுறவாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட ரூபா ஐந்து லட்சத்து ஐம்பத்திரெண்டாயிரமும். மாவட்ட மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் ராஜன் அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரசாரப் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் பேசுகையில், தென் தமிழீழ மக்களுக்கு இவ்வாறு தற்போது நம் செய்யும் உதவிகள் மூலம் ஏற்படும் இணைப்பு நீடித்து நிலைத்து நிற்கும் என்றார்.

யாழ் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருகை தந்திருந்த ஆயிரக்கணக்கான கூட்டுறவாளர்கள் மேற்படி வைபவத்தில் கலந்து கொண்டனர். (20)

# பல நாட்கள் மீட்காத நிலையில் கரை ஒதுங்கிய ஆணின் சடலம்

(குருநகர்)

அழுகிய ஆணின் சடலம் ஒன்று பண்டைதீவுச் சந்திக்கு அண்மையாகக் கரை ஒதுங்கி சில தினங்களாகக் கிடப்பதாக கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அப்பகுதிக்கு இப்பொழுது எவரும் அதிகம் செல்லுவதில்லையென்றும், மேற்படி விடயம் தெரியாமல் இருந்துவருவதால் இதுவரை சடலம் மீட்கப்பட்டு அடையாளம் கண்டு புதைக்கப்படாமல் இருந்து வருவதாகவும் நம்பப்படுகிறது (21)

## திறப்புவிழா

புன்னாலைக்கட்டுவன் தெற்குச் சந்தியில் அமைக்கப் பெற்ற மாவீரர் நினைவாலய திறப்புவிழா இன்று மாலை ஐந்து மணிக்கு நடைபெறவுள்ளது.

## குடும்பஸ்தரை காணவில்லை

(குருநகர்)

குருநகர் பகுதியைச் சேர்ந்த ம. சேச்சில் (வயது 32) என்ற குடும்பஸ்தர் திடீரென காணாமற் போனமையால் இவரது மனைவியும் நான்கு பிள்ளைகளும் இவரைத்தேடும் பணியில் இரவு பகலாக ஈடுபட்டுள்ளனர்.

இவரைத் தேடிக்கண்டு பிடித்துத் தரும்படி விடுதலைப் புலிகளிடமும் இவரது மனைவி முறையிட்டுள்ளார்.

12,600 மி...

சுமார் ரூ 17,600 மில்லியன்களையும், அகதிகளுக்கு உணவு வழங்குவதற்காக மேலும் ரூ 1,600 மில்லியன்களையும் செலவிட வேண்டி ஏற்பட்டது.

இவ்வாறு அண்மையில் இடம் பெற்ற ஐ தே கட்சியின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி பிரேமதாசா குறிப்பிட்டுள்ளார்.

கால்நடை

இனவிருத்தி ... துக்கலங்... சேமித்து வைப்பதற்கு தொடர்ச்சியான மின்சாரம் இல்லாமையால் செயற்கை முறையினைப்படுத்தல் கடந்த பல மாதங்களாக நடைபெறவில்லை.

சாதாரண அறைவெப்ப நிலையில் மேற்படி இனவிருத்திகலங்களைச் சேமிப்பதற்கு விசேட நொதியம் ஒன்றைக் கண்டறிந்து அதனைப் பயன்படுத்துவது தொடர்பாக யாழ். பல்கலைக்கழகமருத்துவ பீடத் தலைவர் பேராசிரியர் திரு பாலசுப்பிரமணியமும் வட-கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள இனவிருத்திக்கான உதவிப் பணிப்பாளர் டாக்டர் திரு இ. சு. நவரத்தினமும் இணைந்து விரிவான ஆய்வு ஒன்றை மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி ஆய்வு வெற்றியளிக்கும் பட்சத்தில் இனவிருத்திவிந்துக்கலங்களைச் சாதாரண அறை வெப்பநிலையில் பாதுகாத்து, செயற்கை முறைச் சினைப்படுத்தலைத் தொடர்ந்து மேற்கொள்ளக்கூடியதாக இருக்குமென்றும் தொடர்ச்சியான மின்சாரத்தை எதிர்பார்க்கத் தேவையில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இணக்கமன்று விஷேட பொதுக் கூட்டம்

(கோண்டாவில்)

யாழ். மாவட்டத்திலுள்ள எல்லா இணக்க மன்றுப் பொறுப்பாளர்கள், செயலாளர்கள், பொருளாளர்களுக்கான விசேட பொதுக் கூட்டமொன்று நாளை மறுதினம் காலை ஒன்பது மணியளவில் கோண்டாவிலிலுள்ள மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது முக்கிய விடயங்கள் பற்றிக் கலந்துரையாடப்படவுள்ளதால் சம்பந்தப்பட்ட அனைவரும் கலந்து கொள்ளுமபடி கேட்கப்பட்டுள்ளனர்.

## பாலாவிற்கு அஞ்சலி

(அச்சுவேலி)

வீமன்காமத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்த வீரவேங்கை "பாலா" விற்கு (இராசையா தவநேசன் - நாவற்காடு அச்சுவேலி) பெருந்திரளான பொதுமக்கள் இறுதி அஞ்சலி செய்தனர்.

பாலாவின் புகழுடம்பு நாவற்காட்டில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்கு வைக்கப்பட்ட பின்னர் அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையில் பொதுமக்களின் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் (28-12-90) மாலை இராணுவ மரியாதைகளுடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்ட பாலாவின் புகழுடல் கோப்பாய் மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

லொறி

னியா தமிழ் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள அகதி முகாம் வளவினுள் நிறுத்தப்பட்டன. இந்த அகதி முகாமில் தங்கியிருந்த லொறிச் சாரதிகளினாலும், கிளினர்களினாலும், கடந்த நவம்பர் மாதம் 25 ஆம் திகதி மர்மமான முறையில் கொல்லப்பட்ட லொறித் தொழிலாளர்களின் நினைவாக மௌன விரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

மேற்படி மௌனவிரத அனுஷ்டிப்பிற்கு பொலிஸாரினால் தடை விதிக்கப்பட்ட போதிலும் சுமார் ஒரு மணி நேரம் இவ்விரதம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (தி)

# ஷெல்லுடன் விளையாடிய இரண்டு சிறுவர்கள் காயம்

(நல்லூர்)

ஷெல் வெடித்து சங்குவேலியில் நேற்றுப்பிற்பகல் இரண்டு மணியளவில் இரு சிறார்கள் காயமுற்றனர் குமார் என்பவருடைய வளவுக்குள் அநாதரவாகக் கிடந்த ஷெல் ஒன்றை எடுத்துத் திண்ணையில் தேய்த்து விளையாடிய சிறுவர்களே அது வெடித்ததினால் காயமடைந்தனர். மேற்படி காயத்திற்குள்ளான மகேந்திரன் சிவதாசன் (வயது 13) மந்திகை வைத்தியசாலையிலும், கனகரெத்தினம் படுப்பிரசாத் ஒருகை சிதைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர் (8)

## மாதாந்த கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் மாணவர் இயக்க அங்கத்தவர்கட்கான மாதாந்தக் கலந்துரையாடல் நாளைக் காலை பத்து மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. சகல மாணவர் இயக்க அங்கத்தவர்களையும் இக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க யாழ். மாவட்டப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். (மு)

## கலந்துரையாடல் இடம் மாற்றம்

தமிழீழத்தில் கலைஞர்களின் எதிர்காலத் திட்டமொன்றை வகுக்கவும், போராட்டத்துடன் இணைந்து பங்களிப்புச் செய்யவும், தமிழீழக் கலைஞர்கள் அனைவருக்கும், நிதர்சனம் ஒளிபரப்பு சேவையும் விடுதலைப் புலிகள் கலை, கலாசாரப் பிரிவும் அழைப்பு விடுத்துள்ளது. இதற்கான கலந்துரையாடல் நிகழ்வொன்று இன்று 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. இந்த நிகழ்ச்சி நாவலர் கலாசார மண்டபத்தில் இடம் பெறும் என்று முன்னர் வெளிவந்த செய்தியில் வந்திருந்தது தெரிந்ததே

அரசின்

றத்தில் பேசிய ஐக்கிய சோஷலிச முன்னணி உறுப்பினர் அதிதாவுட செனவிரத்தினா கூறினார். மேலும் பேசிய அவர் கிழக்கு கட்டுப்பாட்டின் கீழ் வந்து விட்டது என்றனர். ஆனால் அதிகாரிகள் உயிரிழந்த சம்பவம் நிலைமை வேறுவிதமாக உள்ளதுஎன்பதைக் காட்டுகின்றது எனக் குறிப்பிட்டார்.

வவுனியாவில்

பட்ட வயல் வெளிப் பகுதி ஊடாகச் செல்லுமாறு பயணிகளை இராணுவத்தினர் தொடர்ந்து நிர்ப்பந்திக்கின்றனர்.

கடந்த 27 ஆம் திகதி மதவுவைதைக் குளத்தைச் சேர்ந்த போதையில் வயல் வெளி ஊடாகச் சென்ற மாதும் குருஸ் என்பவர் உட்பட இருவர் கால்களை இழந்தனர்.

வயல் வெளி ஊடாக வவுனியா நகரப்பகுதி நோக்கிப் பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டாம் என விடுதலைப் புலிகள் பொதுமக்களிடம் கேட்டுள்ள போதிலும் மீறிச் செல்பவர்கள் பாதிக்க நேரிடுகிறது. (தி)

# "வி.பி.சிங்கின் தடுமாற்றத்திற்கு மனோவியாதியே காரணம"

(டில்லி)

பஞ்சாப், காஷ்மீர், மண்டல் ஆணைக்குழு விவகாரங்களில் முன்னாள் இந்தியப்பிரதமர் வி பி சிங் தடுமாற்றமாகப் பேசியதற்குக் காரணம் அவருக்கிருந்த மனோ வியாதியாம். குடியியல் உரிமைக்காக சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் ஓ. பி. சக்ஸேனா இந்திய சித்தசுவாதீனமுற்றவர் சட்டத்தின் கீழ் வி. பி சிங் சித்தசுவாதீனமுற்றவர் என்று வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

சட்டத்தரணி தாக்கல் செய்த குற்றப் பத்திரிகையில் சிங்கின் மனைவி இராணி சீத்தாதேவியைச் சாட்சியமாகக் காட்டியுள்ளார். 1952 ஆம் ஆண்டில் இராணி சீதா தேவி தனது கணவன் மனோவியாதியால் பாதிக்கப்பட்டவரென்று, அவர் தமது குடும்பச் சொத்தை இனாமாக வழங்குவதைத் தடைசெய்யக் கோரி மனு ஒன்று தாக்கல் செய்திருந்தார். வினோபாஜி மீதான இயக்கத்திற்கு வி. பி சிங் தமது சொந்த நிலங்களை வழங்கியபோது இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

ஆகவே நீதிமன்றம் வி. பி, சிங்கை உளவள வைத்தியக் குழுவினர் முன்நிறுத்தி அவர் சித்தசுவாதீனமுற்றவரா, இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டும் என்று தன் மனுவில் கோரியிருந்தார்.

வி. பி. சிங் மீதான வழக்கு விசாரணைக்கு வருமுன் அவர் அரசாங்கம் கலைந்து விட்டது குறிப்பிடத்தக்கது.

# ஜப்பான் அமைச்சரவையை பிரதமர் மாற்றி அமைத்தார்

(டோக்கியோ)

யப்பானிய அமைச்சரவை நேற்று இராஜினாமாச் செய்துள்ளது. அமைச்சரவையில் மாற்றம் செய்யப்போவதாகக் கோரி பிரதமர் கையூம் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து 21 பேரைக் கொண்ட மந்திரிசபை இராஜினாமாச் செய்தது. 21 பேருக்குப் பதிலாக 18 பேரைக்கொண்ட புதிய அமைச்சரவையைப் பிரதமர் கையூம் அமைத்துள்ளார். இவ் அமைச்சரவையில் முந்திய அமைச்சரவையின் நிதி, வெளியுறவு உள்துறைகளாகவிருந்த மூன்று அமைச்சர்களும் இடம் பெறுகின்றனர் முந்திய அமைச்சரவையில் பிரச்சினைக்குரிய அமைச்சராகக் கருதப்பட்ட சட்ட மந்திரி புதிய அமைச்சில் இடம்பெறவில்லை அமைச்சரவையில் இடம் பெறாததை விட்டுத் தாம மகிழ்ச்சியடைவதாக முன்னாள் சட்டத்துறை அமைச்சர் கருத்து வெளியிட்டுள்ளார்.

பிரதமர் கையூம் தனது ஆட்சியில் அமைச்சரவையில மாற்றம் செய்தது இது இரண்டாவது தடவையாகும்.

பொய் கூறுதல்

முடியாது என்று கூறிப் பொய் சொன்னதற்காக அந்த வாலிபர் கடுமையாகத் தாக்குதல்களுக்குட்பட்டார். (14), (15)

# சுன்னாகம் சங்க கிளையில் உணவுப்பொருள்கள் திருட்டு

(நமது நிருபர்)

சுன்னாகம் ப நோ. கூ சங்கத்தின் 18 ஆவது கிளை விற்பனை நிலையம் உடைக்கப்பட்டு சுமார் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப்பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இரவு இந்த திருட்டுச்சம்பவம் இடம் பெற்றது.

மேற்படி சங்கத்தின் புன்னாலைக்கட்டுவனிலுள்ள கிளை நிலையத்தின் யன்னல் கதவை உடைத்து உள்புகுந்த திருடர்கள், 5 மூடை சீனி, 1 மூடை அரிசி, 1 மூடை மாவு, 1 மூடை மைசூர் பருப்பு ஆகியவற்றை திருடிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக இருவர் கைதாகியுள்ளனர். (செ த. மை.)

வாவியில்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்யும் பெருமழை காரணமாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு வாவி கொந்தளிப்பாக உள்ளது. அத்துடன் மண்டூர் குருமண்வெளி துறைகளுக்கிடையே சேவையாற்றிய இயந்திரப் படகும் பழுதடைந்துள்ளது. சிறிய சண்ணாடி இழைப் படகுகள் மூலமே பிரயாணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர்

இவ்விதமான பிரயாணங்களின்போது அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. அண்மையில் இடம்பெற்ற விபத்தொன்றில் ஒருவர் மரணமடையவும் நேரிட்டுள்ளது.

எல் சல்வ

ஆரம்பித்த தேசிய விடுதலை முன்னணி ஐக்கிய நாடுகள் சபையின் மேற்பார்வையில் யுத்தநிறுத்தத்திற்கும் உடன்பாட்டிற்கும் வரப்போவதாக அறிவித்துள்ளது அரசாங்கத்துடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தைகளில் புதிய யோசனைகள் முன் வைக்கப்படும் என்றும், அரசாங்கம் அதன் வழமையான போக்கைக் கைவிட்டு உடன்பாட்டிற்கு வரலாம் என்றும் தேசிய விடுதலை முன்னணியின் அறிக்கை மேலும் கூறுகின்றது.

## பொதுக்கூட்டம்

கோப்பாய் தெற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் இன்று பிற்பகல் நடைபெற உள்ளது. (24)

தமிழ் எம். பி.

ஆயுள் காப்புறுதி விடயத்தில் பாரபட்சமாக செயற்படுவதாக குற்றம் சாட்டினார். குறிப்பாக தமிழ் எம். பிகளைக் காப்புறுதி செய்ய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தயக்கம்காட்டிவருகின்றது எனத் தெரிவித்துள்ளார்

புலிகளின்

தெரியவருகிறது:

அதேவேளை புலிகளின் இந்த யுத்தநிறுத்த அறிவிப்பு அரசை நெருக்கடி ஒன்றில் தள்ளியுள்ளதாகவும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.